செய்தி மடல்

ICRC

இலங்கை

# மனிதநேய சிறைச்சாலைகளை அடைந்துகொள்ளுதல்

ஏப்ரல் - ஜூன் 2018



ஒரு சிறைச்சாலை கட்டப்பட்டால் அது பல தலைமுறைகள் வரை நீடிக்க வேண்டும் என்பதும், பல்வேறு வகையான கைதிகளுக்காகவும், குற்றவியல் நீதி முறைக்குள் உள்ள போக்குகளுக்காகவும் அது இயங்க வேண்டிய தேவையுள்ளது என்பதை நாம் அறிவோம். இதில் வடிவமைப்பு என்பது அவசியமாகும். ஒரு சிறைச்சாலை என்பது ஒரு சூழலாகும் என்பதோடு, அங்கு வாழக்கூடிய மற்றும் வேலை செய்யக்கூடியவர்களிலும், அங்குள்ளவர்களை தரிசிப்பவர்களிலும், சுற்றியுள்ள சமூகங்களிலும் ஒரு வெளிப்படையான தாக்கத்தை ஏற்படுத்தவல்ல ஏதாவது ஒரு சூழலாக இருக்கும். ஒரு சிறைச்சாலை என்பது மனிதநேய தரநியமங்களுடன் இணைந்தாக மேற்கொள்ளப்படும் ஒரு மூலோபாயத் திட்டமிடல் செயன்முறையிலிருந்து உருவாகும் கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானங்களின் பிரதிபலிப்பாகும். இதன் இறுதி முடிவு மனிதநேய சிறைச்சாலையாகும்.

எந்தவொரு சிறைச்சாலை கட்டட செயற்திட்டமும் முதலில் மனிதநேய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என செஞ்சிலுவை சர்வதேசக் குழு (செ.ச.குழு) கருதுகின்றது. சிறைச்சாலைத் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புக்கான மனிதநேய வழிமுறையானது மன்டேலா விதிமுறைகளில் இருந்து உருவாகும் நான்கு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அவையாவன, தீங்கிழைக்காமை, சாதாரன நிலைமையை உயர்ந்தபட்சம் பேணுதல், சுகாதாரம் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்தல், மற்றும் சமூகத்துடனான தொடர்பை பேணுதல் என்பனவாகும்.

வினைத்திறனான சிறைச்சாலை வடிவமைப்பானது சிறைச்சாலை விபரணம், சட்ட திட்டம், வடிவமைப்பு, இருப்புக்குப் பிந்திய மதிப்பீடு மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களில் இருந்து ஆரம்பமாகும் பல நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது. குறிப்பாக இந்த செயன்முறையில்தான் செ.ச.குழுவின் கொழும்பு பணிக்குழாம் சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது. மன்டேலா விதிமுறைகளையும், இலங்கைக்கான எதிர்கால சிறைச்சாலை வடிவமைப்புக்குரிய சட்டதிட்டங்களையும் ஒன்றிணைப்பதற்காக இந்த வருடத்தில் ஏற்கனவே மூன்று செயலமர்வுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த அணுகுமுறையின் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் பாதுகாப்பு, புனர்வாழ்வளிப்பு, ஆரோக்கியமான தங்குமிடம், ஒரு சிறந்த வேலைச் சூழல் என்பவற்றை வழங்கும் ஒரு சிறைச்சாலையை உருவாக்கக்கூடிய ஒரு செயன்முறைக்கு வழிகாட்ட நாம் எதிர்பார்க்கின்றோம். . சுருக்கமாக சொல்லப் போனால் ஒரு மனிதநேய சிறைச்சாலையில் ஒரு சமூக உறுப்பினராக இருப்பதற்குரிய சூழலை உருவாக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில், 1989ம் ஆண்டிலிருந்து செ.ச.குழுவானது நாடு பூராகவும் உள்ள அனைத்து தடுப்புக் காவல் நிலையங்களுக்கும் சென்று வருகின்றது. கைதிகளை மனிதநேய அடிப்படையில் நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஆதரவு வழங்குவதே இந்த விஜயங்களின் நோக்கமாகும்.




# இலங்கையில் செ.ச.குழு : மாற்றமடைந்துவரும் மனிதநேய செயற்பாடு.

சுவிற்சலாந்தில் பிறந்த கொராட் பேற்றிக்னட் ஒரு பொருளியலாளராவார். செ.ச.குழுவுடனான அவரது தொழில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்தது. இந்தக் காலப் பகுதியில் அவர் ஒரு பேராளராக பணிபுரிந்த அதேவேளை, இலத்தின் அமெரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, ஆசியா ஆகிய நாடுகளில் முகாமைத்துவ வகிபாகங்களையும் வகித்துள்ளார். இதில் 1995 ஆம் ஆண்டு முதல் 1997ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இலங்கையில் அவர் வகித்த பதவியும் உள்ளடங்குகின்றது. மீண்டும் 21 வருடங்களின் பின்னர் இடைக்கால பணிக்குழாம் தலைவராக மூன்று மாதங்கள் பணியாற்றுவதற்காக கொழும்புக்கு திரும்பினார். இவரது பதவிக் காலம் விரைவில் நிறைவடையவுள்ளது. இந்த சுருக்கமான நேர்காணலில் நாட்டில் மாற்றமடைந்துள்ள மனிதநேய செயற்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## செ.ச.குழுவின் பணி யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் மாற்றமடைந்துள்ளது. அப்படியானால், முக்கியமான செயற்பாடுகள் என்ன?

அந்த நேரத்தில் நாம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவிகளை வழங்கி வந்த அதேவேளை, இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு நடுநிலை இடையீட்டாளராகவும் செயற்பட்டு வந்தோம். மேலும், படைவீரர்கள், எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்கள் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்கள் மத்தியில் சர்வதேச மனிதநேய சட்டத்திற்கு மதிப்பளிப்பதற்கான ஊக்குவிப்பை வழங்கி வந்தோம். அதிகாரிகளுடன் இணைந்து, எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களுக்கு அடிப்படை உணவுகளையும், மருத்துவ உதவிகளையும் எடுத்துச் செல்வதற்காக திருகோணமலைக்கும் யாழ்க் குடா நாட்டிற்கும் இடையில் நாம் வாராந்தம் ஒரு சரக்குக் கப்பலை வழிநடத்தி வந்தோம். அதேபோல் காயமடைந்தவர்களையும், நோயாளிகளையும் அங்கிருந்து வெளியேற்றுவதற்காகவும் இந்த கப்பல் இயங்கி வந்தது.

## யுத்தம் முடிவடைந்து ஒன்பது வருடங்களாகின்றன. இந்நிலையில், இலங்கையில் செ.ச.குழுவின் பொருத்தப்பாட்டை நீங்கள் எப்படி விபரிப்பீர்கள்?

எமது வகிபாகம் மாற்றமடைந்துள்ளது. யுத்தம் காரணமாக ஏற்படும் மனிதநேய தேவைகளை இந்த நாட்களில் தீர்த்துவரும் அதேநேரம், இந்த பிரச்சினைகளை சமாளிப்பதற்காக அதிகாரிகளும், உள்ளூர் நிறுவனங்களாளும் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கி வருகின்றோம். எமது பிரதான ஆற்றுப்படுத்தல்களில் ஒன்றுதான் காணாமல்போனவர்களின் பிரச்சினையாகும். இதன் நிறைவில், நாம் சம்பந்தப்பட்ட பல சட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய அதேவேளை, காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்காக ஒரு விரிவான உதவி நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆரம்பித்தோம். மேலும், நாம் தடயம்சார் நிபுணர்களின் தொழில்நுட்ப ஆற்றலை பலப்படுத்துவதற்காக அவர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றோம். ஒரு முறையான ஆலோசனை சேவை, சுகாதாரம் மற்றும் வாழ்நலத்தூய்மை வசதிகளை வழங்குதல், சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் ஏப்ரல் - ஜூன் 2018 3 பொதுவான நிலைமைகள் மற்றும் வழிநடத்தல்களை மதிப்பீடுசெய்தல் உட்பட ஒரு முழுமையான, கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையுடன் நாம் தடுப்புக் காவல் நிலையங்களுக்கு சென்று வருகின்றோம்.

## செ.ச.குழுவானது எவ்வளவு காலம் இலங்கையில் தொடர்ந்து இயங்கும்?

எமது அணுகுமுறை இரண்டு நோக்கங்களுடன் கூடிய ஒரு இடைக்கால அணுகுமுறையாகும். இதன்போது நாம் இந்த செயற்பாடுகளுக்கும், அதுசார்ந்த நிறுவனங்களுக்கும் உதவி செய்வோம். கொழும்பு என்பது எமது பிராந்திய நிபுணர்களுக்கான ஒரு மையமாக இருக்கும் அதேவேளை, பிராந்திய மாநாடுகள் மற்றும் பயிற்சிக்கும் மையமாக அமைந்துள்ளது.

# மருத்துவ – சட்ட சேவைகளுக்கான தொழில்நுட்ப ஆற்றலை ஊக்குவித்தல்

தொழிற்பாடுகள் மற்றும் வழிமுறைகளை தரப்படுத்தல், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மிகச்சிறந்த நடைமுறைகளையும், பணியாளர் பயிற்சியையும் அறிமுகப்படுத்தல் போன்ற விடயங்களில் குறைந்தபட்சம் ஒரு தரமான உத்தரவாத நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கில் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் தடய மருத்துவம் மற்றும் நச்சியல் நிறுவகத்திற்கு தொழில்நுட்ப மற்றும் பொது உதவிகளை செ.ச.குழுவானது வழங்கவுள்ளது. ஆரம்பத்தில் ஒரு பரீட்சார்த்த செயற்திட்டமாக முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் மூலம் மரணித்தவர்கள் மற்றும் அவர்கள் சம்பந்தப்பட்ட தரவுகளின் முகாமைத்துவத்தை விருத்திசெய்ய எதிர்பார்க்கப்படும் அதேவேளை, இலங்கையில் தடய மருத்துவம் மற்றும் நச்சியல் நிறுவகத்தை மரணம் சம்பந்தப்பட்ட பரீட்சிப்புக்கான தளமாக மாற்றியமைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. மருத்துவ – சட்ட சேவைகளில் ஏற்பட்டுள்ள இந்த விருத்தியானது தனிப்பட்ட சம்பவங்கள் (குற்றச் செயல்கள், விபத்துக்கள், அடையாளம் காணப்படாத நபர்கள்) அல்லது இயற்கை அனர்த்தங்கள், புலம்பெயர் வழிகளில் ஏற்படும் மரணங்கள் அல்லது யுத்தம் மற்றும் யுத்தத்திற்கு பிந்திய தேவைப்பாடுகள் போன்ற பெரிய அளவிலான அல்லது சிக்கலான சந்தர்ப்ப சூழ்நிலைகள் என அனைத்து சந்தர்ப்பஙுக்கும் பயனளிக்கும்.



# மரண விசாரணைகள் பற்றிய சட்டநடைமுறைகளை பங்காளர்கள் தீர்மானிக்கின்றனர்

இந்த செயலமர்வானது நீதியமைச்சினால் அமைக்கப்பட்ட குழுவுடன் இணைந்து செ.ச.குழுவால் ஒழுங்கு செய்யப்பட்டது. 2015ம் ஆண்டு அமைக்கப்பட்ட குறிப்பிட்ட குழுவிற்கு மரண விசாரணைகள் நடத்தப்படுவது தொடர்பான சட்டங்கள், வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கான திருத்தங்களை பரிந்துரைக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. மரண விசாரணை பற்றிய நகல் சட்ட திட்டமொன்றை சட்டமாக மாற்றியமைப்பதற்காக நீதி அமைச்சிடம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் இந்த இறுதி நகல் சட்டதிட்டம் தொடர்பான கருத்துக்களையும், பின்னூட்டல்களையும் வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களையும் ஒன்றுகூட்டுவது இந்த செயலமர்வின் குறிக்கோளாகும். குறிப்பிட்ட குழுவுடன் மிகவும் ஆக்கபூர்வமான உறவுகளை பேணிவரும் செ.ச.குழுவுக்கு இந்த இறுதி நகல் சட்டதிட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள முடிந்தது. குறிப்பாக, அடையாளம் காணப்படாத சடலங்களை அடையாளம் காணுதல், மரண விசாரணையில் குடும்பங்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளல் போன்ற விடயங்கள் சம்பந்தமான முக்கியமான மனிதநேயக் காரணிகள் இந்தத் திருத்தங்களில் பிரதிபலித்தன. மரண விசாணையுடன் சம்பந்தப்பட்ட நீதி அமைச்சு, சுகாதார அமைச்சு, சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு உள்ளிட்ட அனைத்து அமைச்சுக்கள் மற்றும் முகவரமைப்புக்களைச் சேர்ந்த உயர் மட்ட அதிகாரிகள் இந்த செயலமர்வில் பங்கேற்றார்கள். இவர்களின் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் குறிப்பிட்ட நகல் சட்டதிட்டத்தை வகுத்து முடிப்பதற்கு துணைபுரிந்தது. ஆயுத மோதல், அனர்த்தங்கள், புலம்பெயர்வு மற்றும் தடுப்புக் காவலின் போது உயிரிழப்பவர்களை கையாளுவதற்கான இந்த சட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள செ.ச.குழு இந்த செயன்முறையில் ஒழுங்கு விதிகளையும், தொழிற்பாட்டு தரநியமங்களையும் உருவாக்குவதற்காக அதிகாரிகளுக்கு தனது ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. இது செ.ச.குழுவின் அடுத்தகட்ட நடவடிக்கையாக அமைந்துள்ளது.

# விடயங்களும் புள்ளிவிபரங்களும்

## ஏப்ரல் - ஜூன் 2018

### காணாமல் போனவர்களின் குடும்பங்களது தேவைகளில் உதவுதல்

தமது பின்தொடரும் விசாரணைகளின் கீழ் 890 குடும்பங்களை சந்தித்த அதேவேளை, காணாமால் போனவர்கள் தொடர்பான 73 புதிய விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்டன. துணைநிற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக காணாமல் போன 500 பேரின் உறவினர்களுக்கு வாராந்த உளவியல் சமூக உதவி அமர்வுகளை நடத்தியதோடு, அவர்களில் 50 பேருக்கு பொருளாதார, சட்ட, நிர்வாக, கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகளுடன் சம்பந்தப்பட்ட உதவிக்காக தேவைப்படும் வளங்கள் பரிந்துரைக்கப்பட்டது. தமது வாழ்வாதாரங்களை விருத்தி செய்துகொள்வதற்காக 110 குடும்பங்களுக்கு பண உதவி வழங்கப்பட்டது.

### கைதிகளுக்கான நலனோம்பல்

நாடு முழுவதிலும் 3,400 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள 11 இடங்களுக்கு சென்று அங்கு கண்டுணர்ந்த விடயங்களும், அதற்குரிய பரிந்துரைகளும் தடுப்புக்காவல் அதிகாரிகளுடன் நம்பகத்தன்மையுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. தடுப்புக் காவலில் உள்ள தமது உறவினர்களை பார்க்கச் செல்வதற்காக 74 குடும்பங்களுக்கு பயணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. 403 கைதிகளுக்கு கல்வி மற்றும் பொழுதுபோக்குப் பொருட்கள் வழங்கப்பட்டன.

### சர்வதேச மனிதநேய சட்டத்தை ஊக்குவித்தல்

153 சிங்கள பெண் கான்ஸ்டபிள்களுக்கும், 30 தமிழ் உத்தியோகத்தர்களுக்கும், 177 தகுதிகான் உப பொலிஸ் பரிசோதகர்களுக்கும் படை மற்றும் ஆயுதப் பயன்பாடு, தடுப்புக்காவல் பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. 34 இராணுவ அதிகாரிகளுக்கு சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்றுவிப்பாளர்களுக்ககான நான்கு நாள் பயிற்சி 26 இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. 126 விமானப் படை அதிகாரிகளுக்கு ஐக்கிய நாடுகளின் சமாதானப் பணி தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டது. இரண்டு பிக்கு கல்விமான்கள் நேபாளத்தில் நடைபெற்ற தெற்காசிய போதனை அமர்வில் பங்கேற்றார்கள். பங்களதேசில் இடம்பெற்ற சர்வதேச மனிதநேய சட்ட உயர் பாடநெறியல் பேராதனைப் பல்கலைக்கழக கல்விமான், இலங்கை கடற்படை சட்ட அதிகாரி பங்கேற்றார்கள்

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்காக உதவி

இ.செ.சங்க கிளைகளைச் சேர்ந்த 85 பணியாளர்கள் மற்றும் தொண்டர்களுக்கு முகாம் முகாமைத்துவம் உட்பட அனர்த்த பதிலளிப்புக்கான பயிற்சி வழங்கப்பட்டது. வரட்சி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்ணீர்க் கேன்கள், பாடசாலைப் பைகள் புத்தகங்களை வழங்குவதற்கு செ.ச.குழுவானது இ.செ.சங்கத்திற்கு உதவியது. தொண்டர்கள், மாணவர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மனிதநேயக் கொள்கைகள் மற்றும் செஞ்சிலுவை இயக்கம் பற்றி 18 தகவல் பரப்பு அமர்வுகள் நடத்தப்பட இ.செ.சங்கத்திற்கு உதவியது. இ.செ.சங்கத்தின் கிளைகளினால் 4 முதலுதவிச் சேவைகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் 2000 பேர் பயனடைந்தனர்.


செஞ்சிலுவை சர்வதேசக் குழு
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05
இலங்கை
தொலைபேசி: + 94 (11) 250 33 46 தொலைநகல்: + 94 (11) 250 33 48
மின்னஞ்சல் : colombo@icrc.org www.icrc.org

வவுனியா அலுவலகம்,
70, வைரவர் கோவில் வீதி,
வைரவர்புளியங்குளம், வவுனியா
தொலைபேசி : +94 (0)24 222 28 55 தொலைநகல்: +94 (0)24 222 25 37

மட்டக்களப்பு அலுவலகம்
மன்ரெஸா வீதி, கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
தொலைபேசி : +94 (0) 65 222 70 70

facebook.com/icrc
twitter.com/icrc
instagram.com/icrc


ICRC

2018.0624/002 01.2018 200